# இவ்வாண்டு பிறப்பு விகிதம் 2.8 விழுக்காடு சரிவு



**புத்ராஜெயா, நவ. 9-**

**இவ்வாண்டின் முதல் காலாண்டில் நாட்டில் பிறப்பு விழுக்காடு 2.8ஆகச் சரிவு கண்டுள்ளது. இவ்வாண்டின் முதல் காலாண்டில் நாட்டில் 110,354 பேர் மட்டுமே பிறந்துள்ளனர்.**

இந்த எண்ணிக்கை கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 113,506 பேராக இருந்தது என புள்ளி விவரத்துறை நேற்றுக் கூறியது. இவ்வாண்டின் முதல் காலாண்டில் நாட்டில் பெண் சிசுக்களைவிட ஆண் சிசுக்களே அதிகம் பிறந்துள்ளதாக அதன் தலைவர் முகமட் உஸிர் மஹிடின் கூறினார்.

இக்காலகட்டத்தில் 57,260 ஆண் சிசுக்கள் பிறந்துள்ள வேளையில் பெண் சிசுக்களின் எண்ணிக்கை 53,094ஆக மட்டுமே இருந்ததாக அவர் தெரிவித்தார். சிலாங்கூர் மாநிலத்தில் அதிகமான குழந்தைகள் பிறந்துள்ளதாகக் கூறிய அவர், அதன் எண்ணிக்கை 20,648ஆக இருந்தது.

அதேவேளையில் குறைந்த பிறப்பு விகிதம் கொண்ட மாநிலமாக லாபுவான் இடம்பெற்றுள்ளது. அங்கு இதே காலகட்டத்தில் 375 சிசுக்கள் மட்டுமே பிறந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளையில் இவ்வாண்டு இதே காலகட்டத்தில் மரணம் அடைந்தோரின் எண்ணிக்கையும் 10 விழுக்காடு குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டின் முதல் காலாண்டில் நாட்டில் 46,646 பேர் மரணமுற்றதாகக் கூறிய அவர், இந்த எண்ணிக்கை கடந்தாண்டு இதே காலகட்டத்தில் 51,841ஆக இருந்ததாக அவர் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்தில் மட்டும் 7,217 பேர் மரணம் அடைந்துள்ள வேளையில் ஆகக் குறைவான எண்ணிக்கையில் மரணமடைந்துள்ளவர்களின் இடமாக புத்ரா ஜெயா விளங்குகிறது. அங்கு இதே காலகட்டத்தில் 72 பேர் மட்டுமே மரணமுற்றதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு முதல் காலாண்டில் மரணமுற்றவர்களுள் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களே அதிகம். அவர்களுள் 32,417 பேரும் (69.5 விழுக்காடு), 41-59 வயதுக்குட்பட்டோர் 20.8 விழுக்காடும் 15 - 40 வயதுக்குட்பட்டோர் 7.2 விழுக்காடும் 0 -14 வயதுக்கு உட்பட்டோர் 2.5 விழுக்காடும் மரணமுற்றதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாண்டின் முதல் காலாண்டில் நாட்டின் மொத்த மக்கள் தொகை 3 கோடியே 35 லட்சமாக உள்ளதாகக் கணிக்கப்படுவதாகக் கூறிய அவர் இது கடந்த ஆண்டைவிட 1.8 விழுக்காடு அதிகமாகும்.

கடந்தாண்டின் 3ஆவது காலாண்டில் நாட்டின் மொத்த மக்கள் தொகை 3 கோடியே 29 லட்சமாக மட்டுமே இருந்ததாகவும் அவர் கூறினார்.

நாட்டு மக்களுள் ஆண்களின் எண்ணிக்கை 1 கோடியே 72 லட்சம் பேரில் இருந்து 1 கோடியே 75 லட்சமாக உயர்ந்துள்ள அதேவேளையில் பெண்களின் எண்ணிக்கையும் ஒரு கோடியே 57 லட்சத்தில் இருந்து 1 கோடியே 60 லட்சம் பேராக உயர்ந்துள்ளதாகவும் அவர் விவரித்தார்.

## தீபகற்ப மலேசியாவில் 2026ஆம் ஆண்டு

# தேர்தல் தொகுதி எல்லை மறுசீரமைப்பு

கோலாலம்பூர், நவ. 9-

தீபகற்ப மலேசியாவுக்கான தேர்தல் தொகுதி எல்லை மறுசீரமைப்பு மீதான ஆய்வு வரும் 2026ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் என பிரதமர் துறை துணையமைச்சர் (சட்டம் - உருமாற்றம்) ராம் கர்ப்பால் சிங் கூறினார்.

அதேவேளையில் சபா மாநிலத்திற்கான தேர்தல் தொகுதி எல்லை மறுசீரமைப்பு வரும் 2025ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் தொகுதி எல்லை மறுசீரமைப்பு மீதான ஆய்வை தேர்தல் ஆணையம் வரும் ஈராண்டுகளுக்கு மேற்கொள்ளும். அதன்பின்னர் அது தொடர்பான முழு அறிக்கை பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிமிடம் சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் மேற்கொள்ளவிருக்கும் இந்த ஆய்வில் விகிதாச்சாரத் தன்மை உட்பட பல்வேறு விவகாரங்களும் அடங்கியிருக்கும் என அவர் தெரிவித்தார்.

உதாரணத்திற்கு பாங்கியில் 3 லட்சம் வாக்காளர்கள் உள்ள வேளையில் புத்ராஜெயாவில் அதன் எண்ணிக்கை இன்னும் குறைவாக உள்ளது. இதில் 30 ஆயிரம் அல்லது 40 ஆயிரம் வாக்காளர்களின் நிலை குறித்து தேர்தல் ஆணையம் இந்த ஆய்வில் எடுத்துக்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.



நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி - பதில் நேரத்தின்போது கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் வீ. கணபதிராவின் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 13, 14, 15ஆவது பொதுத்தேர்தல்களில் வாக்களித்தவர்களின் எண்ணிக்கை குறைந்துபோனது குறித்து ஆராவ் நாடாளுமன்ற உறுப்பினர் (பெரிக்காத்தான் நேஷனல்) டத்தோஸ்ரீ டாக்டர் ஷஹிடான் காசிம் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளித்த அவர் கடந்த 13ஆவது பொதுத்தேர்தலில் 84.84விழுக்காடும் 14ஆவது பொதுத்தேர்தலில் 82.3 விழுக்காடும் 15ஆவது பொதுத்தேர்தலில் 74.74 விழுக்காடு வாக்காளர்கள் வாக்களித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வாக்களிக்கத் தகுதிபெறுவோரின் வயது 18ஆகக் குறைக்கப்பட்டுள்ள அதேவேளையில் ஒவ்வொரு தொகுதியிலும் அதிகமான வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர் என்ற நம்பிக்கையினாலேயே வாக்களிக்க வெளியேறுவோரின் எண்ணிக்கை குறைந்துவருவதாகவும் துணையமைச்சர் தெரிவித்தார்.

கடந்தாண்டு வாக்களிப்பது மீதான விளக்கங்கள் குறித்து தேர்தல் ஆணையம் 206 நிகழ்ச்சிகளை நாடு முழுவதும் நடத்தியபோது 123,647 பேர் கலந்துகொண்டு வாக்களிப்பது உட்பட ஒரு வாக்காளரின் தார்மீக நடவடிக்கை குறித்து விளக்கம் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

# சிப்பாங்கில் 544 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

புத்ராஜெயா, நவ. 9-

நேற்று பிற்பகல் 2.50 மணி வரையிலான நிலவரப்படி சிப்பாங் மாவட்டத்தில் 8 தற்காலிக தங்கு முகாம்களில் 544 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிங்கில் பொது மண்டபத்தில் 62 பேரும் தாமான் கெமிலாங் பொது மண்டபத்தில் 48 பேரும் கம்போங் டத்தோ அஹ்மாட் ரஸாலி பொது மண்டபத்தில் 93 பேரும் ஜெண்டேராம் ஹிலிர் பொது மண்டபத்தில் 89 பேரும் கம்போங் புக்கிட் தங்காங் பொது மண்டபத்தில் 63 பேரும் டிங்கில் இடைநிலைப்பள்ளியில் 189 பேரும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் வெள்ளம் ஏறிய பெரும்பாலான இடங்களில் நீர் வடியத் தொடங்கி விட்டதாக சிப்பாங் மாவட்ட பேரிடர் மேலாண்மைச் செயற்குழுத் தலைவர் கைரி அஸாலி இப்ராஹிம் தெரிவித்தார்.

மேலும் ஆற்று நீர்மட்டம் உயர்ந்து நீர் வழிந்தோடும் கம்பத்துப் பகுதிகளில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போது வடிகால் தபுப்பு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே சமயம் இப்பகுதிகளில் வெள்ளம் குறித்த நிலவரத்தைப் புதுப்பிப்பதற்கு நாங்கள் சமூக நல இலாகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

ஒவ்வொரு 4 மணி நேரத்திற்கும் ஒரு முறை இந்த நிலவரத்தைப் புதுப்பிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

